Academic Research News

Peer-Reviewed Journal



Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

# Livelihood of the Pallar People in *Mukkudarpallu*

**Dr. P. Ravindaran**, Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil-2, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-9468-7314

Received: 19 April 2025; Revised: 29 May 2025; Accepted: 9 June 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*"Mukkudarpallu" is one of the 96 types of Minor Literature in Tamil. If one or more of the four elements, such as virtue, material, pleasure, and liberation, are lacking in a piece of literature, it is considered to be a piece of Minor Literature. Among the types of literature, Pallu Literature has a special place in it. Pallu literature emerged in the 17$^{th}$ century. "Mukkudarpallu" is very special among Pallu literature. The author has created this literature to understand the laypeople. Although elements of Pallu literature are found in many literatures, such as "Tolkappiyam" and Sangam literature, it emerged as a separate literature in the 12$^{th}$ century. Pallu literature has the speciality of describing the life of farmers. "Mukkudarpallu" is sung on the character Mukkudal Nathan Azhagar. Mukkudtal is the place where the Thamirabarani, Sittraru, and Godandarama rivers meet in Tirunelveli district. "Mukkudarpallu" glorifies Thirumal, Garudazhwar, Senai Mudaliar, and Nammalzhwar as Gods. In "Mukkudarpallu", the Pallan, the Elder Palli, the Younger Palli, the farmers and the villagers are the main characters. In this book, one can see that the Elder Palli speaks disparagingly of Lord Shiva, and the Younger Palli speaks disparagingly of Thirumalai. It also discusses the worship of minor deities and the special qualities of the Mukkudal, where the Pallan and Palli reside. It also tells about tillage, type of cattle, type of paddy, and distribution of harvested paddy, folk deity worship, rain signs, and the Palliar Poosal.*

**Keywords:** *Mukkudarpallu*, Livelihood, Mukkoodal, Pallar People.

## References

[1] Kalavathi, V. Munaivar. *Thamizh Ilakkiya Varalaaru* – II, New Century Book House Pvt. Ltd., Chennai-050, 2023.
[2] Puliyoor Kesikan. *Mukkoodar Pallu*. Pari Nilaiyam, Chennai-109, 2001.
[3] Ravisankar, C, Munaivar. *Thamizhum Ariviyalum*. New Century Book House Pvt. Ltd., Chennai-050, 2024.
[4] Rajam, S. *Mukkudarpallu*. Pari Nilaiyam, Chennai-109, 1959.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# முக்கூடற் பள்ளுவில் பள்ளர் இன மக்களின் வாழ்வியல் நிலைப்பாடு

**முனைவர் பொ. இரவீந்திரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-2, தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0001-9468-7314**

**ஆய்வுச்சுருக்கம்**

*“முக்கூடற்பள்ளு” 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று. ஒரு இலக்கியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்டோ குறைந்து இருப்பின் அது சிற்றிலக்கியம் ஆகும். சிற்றிலக்கிய வகைகளுள் பள்ளு இலக்கியத்திற்கு தனி சிறப்பிடம் உண்டு. பள்ளு இலக்கியங்கள் 17-ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. பள்ளு இலக்கியத்தில் முக்கூடற்பள்ளு மிக சிறப்பானதாகும். இந்த இலக்கியத்தைப் பாமர மக்கள் புரிந்துக்கொள்ளும் வகையில் நூல் ஆசிரியர் படைத்துள்ளார். சிற்றிலக்கியத்தின் கூறுகள் தொல்காப்பியம், சங்க இலக்கியம் என பல இலக்கியங்களில் காணப்பட்டாலும் தனி இலக்கியமாக 12- ஆம் நூற்றாண்டில் தோன்றியது. பள்ளு இலக்கியம் உழவர்களின் வாழ்வியலை எடுத்து கூறும் சிறப்பினை உடையது. முக்கூடற்பள்ளு முக்கூடற் நாதன் அழகர் மீது பாடப்பட்டுள்ளது. முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமிரபரணி, சிற்றாறு, கோதண்டராம ஆறு கூடும் இடமாகும். முக்கூடற்பள்ளு திருமால், கருடாழ்வார், சேனை முதலியார், நம்மாழ்வார் ஆகியோரை கடவுளாக கொண்டு வாழ்த்துகின்றது. முக்கூடற்பள்ளுவில் கதை மாந்தர்களாக பள்ளன், மூத்தப் பள்ளி, இளையப்பள்ளி, உழவர்கள் மற்றும் ஊர் மக்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்நூலில் சிவபெருமானை மூத்தப்பள்ளி இகழ்ந்து பேசுவதையும், திருமாலை இளையப் பள்ளி இகழ்ந்துப் பேசுவதையும் அறிய முடிகின்றது. மேலும், இந்நூல் சிறுதெய்வ வழிபாடு, பள்ளன், பள்ளியர் குடியிருக்கும் முக்கூடலின் சிறப்பு, உழவுத்தொழில், மாட்டின் வகை, நெல் வகை, அறுவடை, நெல் பங்கீடு, நாட்டுப்புற தெய்வ வழிபாடுகள், மழைக்குறி, பள்ளியர் பூசல் போன்ற கருத்துகளை எடுத்துரைக்கின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** முக்கூடற்பள்ளு, வாழ்வாதாரம், முக்கூடல், பள்ளர் மக்கள்.

## முன்னுரை

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று பள்ளு இலக்கியம். இவ்விலக்கியம் பள்ளர்களின் வாழ்வியலை எடுத்துரைக்கின்றது. பள்ளு இலக்கியங்களில் சிறப்பானது முக்கூடற் பள்ளாகும். முக்கூடல் நாதராகிய அழகர் மீது பாடப்பட்டுள்ளது. பள்ளர்களின் வாழ்வியலை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அழகரின் சிறப்புகள்

திருமால் ஒளி வீசும் பச்சை நிறமான மரகதத்தின் நிறம் உடையவர். மண்ணுலகில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் காவலாக விளங்குபவர். இந்த உலகிற்கு நல்வழிக் காட்டுவதற்காக இராமனாகவும் கண்ணனாகவும் திகழ்ந்தவர். முக்கூடலில் எழுந்தருளி இதழ்கள் விரிந்த மலர்களை உடைய துளசி மாலையை அணிந்திருப்பவன். ஆதிசேசன் என்னும் பாம்பினைத் தன்னுடைய படுக்கையாக் கொண்டு பாற்கடலில் துயில் கொள்பவன். துணிவுடைய உன்னுடைய மனமும் பாதங்களும் வலிமை மிக்க தோள்களும் என்னுடைய துணை என்று இந்திரன் கூறியுள்ளார். தேவர்களின் தலைவன் இந்திரனின் பகைவர்களான அசுரர்களை அழித்தவன். தேவர்களும் அசுரர்களும் வணங்கும் தன்மையுடையவன். ஊழிக்கால முடிவில் உலகமெல்லாம் பெருவெள்ளத்துள் ஆழ்ந்து அனைத்தும் அழிந்து நீருள் ஒடுங்கும்.அப்போது மாயையாகிய சக்தியைப் பாம்பணையாகக் கொண்டு அதன் மேல்

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

பாற்கடலில் அறிதுயில் அமர்ந்து விளங்குபவன் மாயனாகிய பெருமாள். இந்நிலவுலகத்தின் காத்தல் கடமையைப் பூண்டு ஒழுகும் காவலன். காயாம்பூவின் நிறத்தைப் போன்ற நீலமேக வண்ணனாகப் பக்தர்களுக்குச் சேவை செய்பவன். செந்தாமரை மலரிலே வீற்றிருப்பவள் திருமகள். அவளைத் தன் திருமேனியாகிய கோவிலின் அகத்தேயும் மார்பின் மேலேயும் மிக்க விருப்பம் உடையவராகச் சுமந்துக் கொண்டிருப்பவர்.

**மருதூர் வளம்**

மருதூரில் கோவில் கொண்டிருப்பவர் சிவபெருமான். அவருக்கு வழி வழியாக அடிமைப்பட்டவள் மருதூர்ப் பள்ளி. தன்னுடைய ஒளியுடைய முகம் பள்ளருக்கு மட்டுமே தோன்ற வயலில் இறங்கி நாற்றினை நட்டதனால் அந்த ஒரு போகத்திலேயே ஐந்து போக விளைச்சல் விளைந்தது. மருதூர்ப் பள்ளி கைராசிக்காரி என்பதனை,

**ஆதிமரு தீசிருக்கும் ஆட்பட்டு அழகருக்கும்**
**பாதியடி மைப்படுமோ பள்ளிமரு தூரிளையாள்**
**சோதிமுகம் மள்ளருக்கே தோன்றவய லுற்று நட்ட**
**போதிலொரு பூவில் ஐந்து பூவும் பயிரமே (பா. 10)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**தென்கரை வளம்**

தென்கரையில் வானில் இருண்ட மேகங்கள் திரண்டு நிலவை மறைத்தன. அங்கு சூரியனின் வெப்பமாகிய வெயில் காய்வதை காணலாம். மக்களின் வயிறு காய்வதை காண முடியாது. வெண்மையான தயிர்த் துண்டுகள் கலங்குவதை காணலாம் மக்கள் மனம் கலங்குவது காண முடியாது. நாளிகைகளும் வாரங்களும் மாய்ந்துக் கொண்டுப் போவதை காணலாம். ஆனால் மக்கள் பசியால் மாய்தலை என்றும் காண முடியாது. மேகங்கள் சுழன்றுப் பொழியும் மழை வெள்ளத்தை காணலாம். மக்கள் மறுகி வாடுவதை காண முடியாது. செந்நெற் குலைகள் காய்த்துச் சாய்ந்து கிடப்பதைக் காணலாம். மக்கள் தலை சாய்ந்து நடக்கும் நிலையினைக் காணவே முடியாது. தாபத நிலையினர் தனித் திருப்பதை காணலாம். கணவன் மனைவி தனித்திருப்பதைக் காண முடியாது. உரைத்திடும் சந்தனம் தேய்வதைக் காணலாம். உரைத்திடும் செய்யுட்களில் பொருள் தேய்வதை காண முடியாது. இத்தகைய வளம் உடையது சீவல மங்கை தென்கரை நாடு. இதனை,

**காயக் கண்டதுசூரிய காந்தி**
**கலங்கக் கண்டது**
**வெண்தயிர்க் கண்டம்**
**மாயக் கண்டது நாழிகை வாரம்**
**மறுகக் கண்டது**
**வான்சுழி வெள்ளம்**
**சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்**
**தனிப்பக் கண்டது**
**தாபதர் உள்ளம்**
**தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்**
**சீவல மங்கைத்**
**தென்கரை நாடே. (பா. 23)**

இப்பாடலடிகள் எடுத்தியம்புகின்றன. தாமரை மலரானது தன் தலையினை உயர்த்தி வரப்பிலே வளர்ந்திருக்கும். இஞ்சியின் இலையினை வருடிவிடும். இஞ்சியோ மஞ்சளின் கழுத்தை தழுவியவாறு தொடும். மஞ்சள் தன் அருகிலேயே அசைந்தாடி நிற்கும். செந்நெற் பயிருடன் அளவளாவி நிற்கும். செந்நெல் செங்கரும்புக்குக் கை கொடுத்து நிற்கும். இவ்வாறு ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று ஆதரவாக வளர்கின்ற செழுமையுடையது சீவலமங்கைத் தென்கரை நாடு. இதனை,

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**பங்க யந்தலை நீட்டிக் குரம்பினில்**
**பச்சை இஞ்சியின்**
**பார்சடை தீண்டும்**
**தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்**
**தடவி மெள்ளத்**
**தொடுமந்த மஞ்சள்**
**அங்க சைந்திடும் காய்க்கதிர்ச் செந்நெல்**
**அளாவி நிற்குமச்**
**செந்நெலு மப்பால்**
**செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்**
**சீவல மங்கைத்**
**தென்கரை நாடே (பா. 27)**

இப்பாடலடிகள் வழி அறியமுடிகின்றது.

**வடகரை வளம்**

ஆசூர் நாட்டில் வெண்மையான திங்களில் தான் கறை காணப்படும் மக்கள் உள்ளங்களில் எவ்வித கரையும் காணப்படுவதில்லை. கம்பங்களில் கட்டப்பட்டிருக்கும் யானைகள் மதம் பட்டு நிற்குமே அல்லாமல் மக்கள் கடன்பட்டு வாழ்வதில்லை. பறவைகள் சிறைப்பட்டிருக்குமே அல்லாமல் மக்கள் எவரும் சிறைப்பட்டிருப்பதில்லை. நெய் பொருந்திய விளக்கில் திரி பொருத்தப்பட்டிருக்குமே அல்லாமல் அங்குள்ளவர்களின் அறிவிலோ நடத்தையிலோ எவ்வகை திரிவையும் காண முடிவதில்லை. வீட்டுக்கு அம்மிகள் கொத்தியதால் குறைபட்டிருக்குமே அல்லாமல் மக்களின் வாழ்க்கை தரம் குறைபட்டிருப்பதை காண முடியாது. கொடிகளும் அவை தழுவி படரும் பூங் கொம்புகளும் குழையுடையதாக இருக்குமே தவிர மக்கள் குழைந்து கும்பிட்டு வாழ்பவராக எவரும் இல்லை. செய்யுட்களின் அருமையான பொருட்களில் நயங்கள் மறைக்கப்பட்டிருக்குமே அல்லாமல் வயல்களுள் விளையும் விளைச்சலில் எவ்விதமான ஒளிவு மறைவுமே காணப்படுவதில்லை. இத்தகைய வளமுடைய நாடு ஆசூர் வடகரை நாடு என்பதை,

**கறைப்பட் டுள்ளது வெண்கலைத் திங்கள்**
**கடம்பட் டு ள்ளது**
**கம்பத்து வேழம்**
**சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு**
**திரிபட் டுள்ளது**
**நெய்படும் தீபம்**
**குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி**
**குழைபட் டுள்ளது**
**வில்லியங் கொம்பு**
**மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள்**
**வளமை ஆசூர்**
**வடகரை நாடே (பா. 22)**

இவ்வடிகள் வழி அறியலாம். வடகரையில் மிகவும் உயர்ந்த தென்னை மரங்களின் இளநீர்களை கமுகு மரங்கள் தாங்கிக் கொள்ளும். அதன் காய்களை மாமரங்கள் சுமந்துக் கொண்டிருக்கும். மாமரங்களின் காய்களைப் பலாமரங்கள் தாங்கிக் கொண்டிருக்கும். பலாக்கனியோ அதனை அடுத்திருக்கும் வாழை மரங்கள் மீது சாய்ந்திருக்க வாழைக்குலையை மாதுளங்கொம்பு தாங்கிக் கொள்ளும். இவ்வாறு மரங்கள் ஒன்றோடுடொன்று இணைந்து தாங்கிக்கொள்ளும் வளமுடைய நாடு ஆசூர் வடகரைநாடு என்பதனை,

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**மீது யர்ந்திடும் தெங்கிளநீரை**
**மிடைந்த பூகஞ்**
**சுமந்து தன் காயைச்**
**குத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்**
**சூதந் தன் தன்கனி**
**தூங்கும் பலாவில்**
**ஓதும் அந்த பலாக்கனி வாழை**
**உளுக்க வேகமந்து**
**ஒண்குலைசாய்க்கும்**
**மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்**
**வளமே ஆசீர்**
**வடகரை நாடே (பா. 26)**

இப்பாடலடிகளின் வழி மூத்த பள்ளி பெருமிதத்துடன் எடுத்துரைக்கின்றாள்.

**முக்கூடல் வளம்**

முக்கூடலில் ஒளி வீசும் மணிகள் பதித்த மாளிகைகள் திரு வீதிகளில் நெருக்கமாக இருக்கும். சோலைகளில் திரியும் வண்டினங்கள் ரீங்காரப் பண்ணினைப் பாடி இரும்பு உள்ளங்களை உருகச் செய்யும். நால்வகை சாதியினரும் ஒன்றே குலம் என்ற அறத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பார்கள். நீர் முகப்பார் குடங்ககளில் வாளை மீன்கள் நிறைந்து நெருக்கடி நிலவச் செய்து கொண்டிருக்கும். எருமையானது கழனிகளில் மலிந்து கிடக்கும் நீர்ப்பூக்களை மேய்ந்து அதன் கண் உள்ள மதுவை உட் கொண்டதனால் செருக்கி திரியும். மேட்டு நிலங்களில் குளிர்ந்த மலர்கள் இதழ் விரித்திருக்கும். இதனை,

**சோதி மாமணி வீதி நெருக்கும்**
**சுரும்பு பாடி**
**இரும்பும் உருக்கும்**
**சாதி நால்வளம் நீதி பெருக்கும்**
**தடத்து வாளை**
**குடத்தை நெருக்கும்**
**போதில் மேய்ந்திள மேதி செருக்கும்**
**புனமெல லாநதண**
**மலர்விண் டிருக்கும்**
**ஆதிநாதர் அனாதி யொருத்தர்**
**அழகர் முக்கூடல்**
**ஊரெங்கள் ஊரே (பா. 24)**

இவ்வடிகள் நமக்கு தெளிவுப்படுத்துகின்றன.

**தெய்வ வழிபாடு**

மாதம் மும்மாரியாக மழைப் பெய்வதற்கு தெய்வங்களை முறையாகப் போற்றி வந்தமையை,

**திங்கள்மும் மாரியுல கெங்கும் பெய்யவே**
**தெய்வத்தைப் போற்றி வந்தாற்**
**கைதருங் காண்**
**பொங்கலு மிட்டுத்தேங் காயும் கரும்பும்**
**பூலா வுடையாருக்குச்**
**சாலக் கொடுங்கள்**
**குங்குமத் தோடுசந் தனமுங் கலந்து**
**குமுக்கா வுடையா ரய்யர்**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**தமக்குச் சாத்தும்**
**கங்கணங் கட்டியே ஏழுசெங் கடாயும்**
**கரையச் சாத்தா முன்னே**
**விரைய வெட்டும் (பா. 33)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. பூலாவுடையாருக்குப் பொங்கலிட்டுத் தேங்காயும் கரும்பும் நிரம்ப படையலிட்டனர். குங்குமத்தோடு சந்தனத்தையும் கலந்துக் குமுக்கா உடையார் அய்யனுக்குச் சாத்திப் போற்றியுள்ளனர். உச்சியிலே கொண்டைப் பூவினையுடைய செஞ் சேவலைச் சாத்திர முறைப்படி புலியூருடையாருக்குப் பலியிட்டதை,

**பூத்தலைச் செஞ்சேவற் சாத்திரத் தாலே**
**புலியூ ருடையார்**
**கொள்ளப் பலிதானிடும்**
**வாய்த்தசா ராயமும் பனையூற்றுக் கள்ளும்**
**வடக்குவாய்ச் செல்லியுண்ணக்**
**குடத்தில வையும்**
**தோத்திரம் பண்ணும் பண்ணுங் கூத்தாடியே**
**தொழுது தொழுது**
**வேண்டும் மழைபெய்யவே (பா. 34)**

இப்பாடலடிகள் விளக்குகின்றன. சாராயமும் கள்ளும் வடக்கு வாசல் செல்லியானவள் உண்ணுமாறு குடங்களில் வைத்தனர். பண்பாடி கூத்தாடி தொழுது மழை பெய்யுமாறு பள்ளர்கள் அழகரின் திருநாமங்களை வாழ்த்தி வேண்டினர்.

**நெல்வகைகள்**

பழந்தமிழர்கள் வானிலை அறிவியல் அறிந்து இயற்கையோடு இயைந்து உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவற்றை பல இலக்கியங்கள் வழி அறியப்பட்டாலும் குறிப்பாக முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் உழவுத் தொழில் பற்றியும் நெல் வகைகள் பற்றியும் அதிக அளவில் அறிய முடிகின்றது. ”பள்ளு இலக்கியங்களில் ஏறத்தாழ 150 வகைகளின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தனர் என்பதை நெல் வகைகளுக்கு இடப்பட்ட பெயரினைக் கொண்டே நாம் உணரலாம். தமிழர்கள் தாங்கள் கண்ட இயற்கை பொருள்களையும், வேளாண் தொழிலோடு தொடர்புடைய பொருள்களையும், சமுதாய வாழ்வில் இடம்பெறும் இன்றியமையாப் பொருள்களையும், தெய்வங்களையும், மக்களில் சிறந்தாரையும், நெல்லின் வண்ணம், வடிவம், சுவை, இயல்பு இவற்றிற்கு ஏற்ப பொருத்திப் பெயரிட்ட திறம் எண்ணுதற்கு வியப்பிற்குரியதாகும்.” (முனைவர் செ. ரவிசங்கர், பக், 104 -105)

ஒவ்வொரு நெல்லும் தனிப்பட்ட வடிவத்தையும் சுவையையும் மருத்துவ பயனையும் கொண்டுள்ளது. “நெல் வகைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டவை. நீண்டும், குறுகியும், பருத்தும், மெலிந்தும் காணப்படும் அவற்றின் வடிவங்களுகேற்ப பெயர்கள் வழங்கப்பட்டன. நெல்லின் வடிவத்தைக் கொண்டு மூக்கு நீண்டிருப்பதும் வால் நீண்டிருப்பதுமென இருவகையாக்கிப் பெயரிட்டனர்.

1. **மூக்கு நீண்டிருப்பது - நெடுமூக்கன், மூக்கன் சம்பா, மூக்கன்நெல்**
2. **வால் நீண்டிருப்பது - வாலான் நெல்**
   **பொதுப்பெயர் – கட்டைவாலன், குதிரை வாலான்**
3. **காடையின் கழுத்து - காடைக் கழுத்தன்**
4. **யானைக் கொம்பு வடிவம் - ஆனைக்கொம்புச் சம்பா**
5. **மூங்கில் முத்து வடிவம் – மூங்கிற்சம்பா**
6. **கோதுமை வடிவம் - கோதுமைச் சம்பா**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

நெல்லில் கதிர் பிடிப்பதற்கு முன்பு வெயில் மிகுதியாக கிடைப்பதால் ஒளிச் சேர்க்கையும் மிகுதியாக நடைபெறுகிறது." (முனைவர்செ. ரவிசங்கர், ப. 105) நெல்லின் வடிவத்தைக் கொண்டு பெயர் இடப்பட்டிருப்பது சிறப்பாகும். இன்று பல வகையான நெல் வகைகள் அழிந்துவிட்டன.

"நெல்லின் நிறம், அரசியின் நிறம் ஆகியவற்றைக் கொண்டு நெல்லுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டன.

**1. கருமை வண்ணமுடையவை - கருங்குறுவை, கருஞ்சூரை, கருப்பன்**
**2. செம்மை நிறத்தையும், மங்கலப் பொருளையும் இணைத்துப் பெயரிடப்பட்ட நெல் வகை - குங்குமச் சம்பா, குங்குமப்பாளை**
**3. பால்போன்ற வெண்மையான கடுக்கண் போன்ற அரிசியையுடைய நெல் வகை – பாற்கடுக்கண்**
**4. வெண்மை நிறத்திலேயே பல்வகை நெல் வகைகள் உள்ளன. வெள்ளை முடங்கன், பெரு வெள்ளை, முழு வெள்ளை, தும்பை பாசி**
**5. பச்சை நிறம் - பச்சைப் பெருமாள்**
**6. செம்மையான நிறம் மிளகைப் போன்ற வடிவம் - செஞ்சம்பா, செந்தாழை, செம்மிளக்கி" ( முனைவர் செ. ரவிசங்கர், ப. 106)**

பள்ளர்கள் பயன்படுத்திய நெல் விதைகளை முக்கூடற்பள்ளு நயம் பட எடுத்துரைக்கின்றது. மணல்வாரி, பூம்பாளை, குரும்பை என்பன போன்ற பலவகையான நெல் வகைகளைப் பயிரிட்டதை,

**பலவெள் ளாண்மையிட் டேன்மணல் வாரியைப்**
**பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்**
**செலவு போனதும் போய்ச்சில் பூம்பாளை**
**செண்ட லங்காரர் தோப்புக்கே காணும்**
**கலக வேற்கைத் திருமங்கை யாழ்வானைக்**
**காணேன் மச்சு முறித்தானைக் காட்டிச்**
**சொலவொண் ணாத் தெய்வ தாசி களுக்கே**
**சொறி குரும்பை விற்றார் பலர் ஆண்டே (பா. 69)**

என்ற பாடல் அடிகள் வழி அறிய முடிகின்றது. இராசவாணன் என்னும் நெல் பயிரிட்டதனை,

**ஈடி லாவகைக் கின்னம் எழுதி**
**இராச வாணனை இரண்டுபங் கிட்டு**
**நாடி யேகாவை அம்பல வாண**
**நயினார் பேரிற்பின் பாதியும் கூட்டி (பா. 71)**

இவ்வடிகள் சுட்டுகின்றன.

சித்திர காலி வாலான், சிறை மீட்டான், மணல் வாரி, கருஞ்சம்பா, செஞ்சூரை, சீரகச் சம்பா, முத்து விளங்கி, மலை முண்டன்,பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற் சம்பா, கத்தூரிவாணன், கடை கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை பூம்பாளை, பாற்கடுக்கன், வெள்ளை, புத்தன், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் இரண்டு பூவுக்கும் காணுமளவுக்குத் தொகுத்துப் பள்ளன் சேரியில் விதைத்ததை,

**சித்திரக் காலிவாலான் சிறை மீட்டான் மணல் வாரி**
**செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா**
**முத்து விளங்கிமலை முண்டன்பொற் பாளைநெடு**
**மூக்கன் அரிக்கிராவிவி மூங்கிற் சம்பா**
**கத்தூரி வாணன் காடைக் கழுத்தன் இரங்கல் மீட்டான்**
**கல்லுண்டை பூம்பாளைபாற் கடுக்கன் வெள்ளை**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**புத்தன கருங்குறுவை புனுகுச்சம் பாவும் இரு**
**பூவுக்கும் விதை சேரிற் போட்டேனா னாண்டே (பா. 109)**

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன.

**மாட்டு வகைகள்**

முக்கூடற்பள்ளில் பள்ளர்கள் பல வகையான மாட்டுவகைகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஆயிரமல்லியன், ஒற்றைக் கொம்பன் மாடுகளைப் பயன்படுத்தியதை,

**அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்**
**அழகர் பண்ணைக்கு உழவுமா டெங்கே?**
**விதிவசந் தன்னில் ஆயிர மல்லியன்**
**மேற்றி சைமுகஞ் சேர்ந்தது காணேன் (பா. 72)**
**ஒற்றைக் கொம்பனைத் தாண்டவ ராயன்**
**உள்ளூர்க் கோவிலுக் குள்ளே யடைத்தான் (பா. 73)**

இப் பாடலடிகள் வழி அறியலாம். குடைக்கொம்பன் செம்மறையன் குத்துக் குளம்பன், மோழை குடைச் செவியன், குற்றாலன், கூடுகொம்பன், மடப்புல்லை, கரும்போரான், மயிலை, சுழற்சிக் கண்ணன், மட்டைக் கொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன், படைப்புப்பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன், பசுக் காத்தான், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத்தலைப்பூ நிறத்தான், வெள்ளைக்காளை என்பன போன்ற மாடுகள் இருந்ததை,

**குடைக்கொம்பன், செம்மறையன்**
**குத்துக் குளம்பன் மோழை**
**குடைச் செவியன் குற்றாலன்**
**கூடுகொம்பன்**
**மடப்புல்லைக் கரும்போரான்**
**மயிலை சுழற்சிக் கண்ணன்**
**மட்டைக்கொம் பன்கருப்பன்**
**மஞ்சள் வாலன்**
**படைப்புப் பிடுங்கி கொட்டைப்**
**பாக்கன் கருமறையன்**
**பசுக்காத்தான் அணிற்காலன்**
**படலை கொம்பன்**
**விடத்தலைப் பூ நிறத்தான்**
**வெள்ளைக் காளையும் இந்த**
**விதத்திலுண் டாயிரந்தான்**
**மெய்காண் ஆண்டே (பா. 110)**

இப்பாடலடிகள் விளக்குகின்றன.

**உழவுத் தொழில்**

உழவுத் தொழில் உலகெங்கும் நடக்கும் உன்னதமானத் தொழிலாகும். இத்தொழிலினை சிற்றிலக்கியத்தில் பள்ளு இலக்கியம் மிகச்சிறந்த முறையில் எடுத்துரைக்கின்றது. "உழவுத் தொழில் செய்யும் மக்கள் பள்ளர்கள் ஆவர். இவர்களில் பெண்கள், பள்ளியர், பள்ளத்தியர் என அழைக்கப்படுவர். எனவே, வயல்களில் உளவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம்." (கலாவதி, ப. 28)

பஞ்சாங்கம் பார்த்து சப்தமி திதியும் புதன்கிழமையும் சுவாதி நட்சத்திரமும் கூடிய நாளில் ஏர்பூட்டி, உழவுத் தொழில் மேற்கொள்ள சென்றதை,

**சத்தமி புதன்சோதி தைதுலக் கரணம்**
**தவறாத சுபயோகந் தருபஞ் சாங்கம்**

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**மெத்தநன் றெனப் பார்த்து மேலான வேதியர்கள்**
**மிக்க துலாமுகிழ்த்தம் விதித்தார் இன்று**
**பத்தர்பணி முக்கூடல் பரமனார் அழகர் தம்**
**பண்ணைக்கே ரிடவேணும் பள்ளா என்றே**
**உத்தாரம் பண்ணைக் காரன் உரைத்தான்**
**உரையைக் கேட்ட வுடனே குடும்பன்**
**ஏர்கொண் டுழச் சென்றானே (பா. 114)**

இவ்வடிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. சாத்தன், பெரியான், அரியான், சடையான், உடையான், கட்டைச் சங்கன்,புங்கன், போத்தன், அருதன், சிங்கன் என சேரியிலுள்ள பள்ளர்கள் எல்லாரும் கூடி குரவையிட்டு ஏர்மங்கலம் பாடி ஏர்பூட்டி உழுதலை,

**சாத்தன் பெரியான் கொன்னைத்**
**தாண்டி அரியான்**
**சடையான் உடையான் கட்டைச்**
**சங்கன் புங்கன்…**
**…கூத்தன் முதலா யுள்ள**
**பள்ளர் எல்லாம்**
**குரவையிட் டேரைப் பூட்டிக்**
**கூடி யுழுதார் ( பா. 115)**

இவ்வடிகள் நமக்கு பகிர்கின்றன.

**விதைத்தல்**

பள்ளன் எல்லோருடனும் கூடி தொழுது தெய்வக் கடன்களை முடித்து விட்டு தொளியிலேயே விதைகளை எடுத்துத் தெளித்ததை,

**உழுத உழவைக் கண்டு களித்தான் பள்ளர்**
**உள்ள பேரையெல்லாம் விளித்தான்**
**தொழுது தெய்வக்கடன் கழித்தான் – அந்தத்**
**தொளியில் விதைகள் எல்லாம் தெளித்தான் (பா. 122)**

இவ்வடிகள் நமக்குப் பகர்கின்றன.

**விதைகள் முளைத்தல்**

விதைத்த விதைகள் முளைக்க தொடங்கின. பள்ளன் அதற்கு சரியான அளவில் தண்ணீர் அடைத்து நார்த்தாங்கால் வெட்டி விட்டான். மரக்கொம்புகளை வெட்டி நாற்றங்கால் சுற்றி வேலிநட்டுப் பாதுகாவல் செய்தார். இதனை,

**முளைக்குத் தண்ணீரை அடைத் திட்டான் – கொல்லை**
**முழுதும் மறுநாள் வெட்டி விட்டான்**
**வளைத்து வேலிசூழ நட்டான் - நாற்று**
**வளர்க்க நாளும் ஒருப் பட்டான்**
**வளர்ந்த நாற்றைமுகங் கண்டான்- சேரி**
**மள்ளர் கூடமது வுண்டான் (பா. 124)**

இவ்வடிகள் வழி அறியலாம். நாற்று வளர்வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து மதுவுண்டு களித்தான்.

**நாற்று நடுதல்**

முக்கூடல் நகரில் நல்ல நாளில் நாற்று நடுதல் ஆரம்பமானது. முதலில் தரிசை முதலுழவு செய்தனர். பின்னர் மறித்து மறித்து முச்சாலடித்து நாலு உழவுகளையும் உழுது முடித்தனர். அதன் பின் மூன்று மரம் அடித்து வயல்களைச் சமமாக்கி திருத்தினர். முக்கூடல் அழகரின் திருப்பாதங்களை வணங்கி நாற்று முடிகளை நெற்றியில் வைத்து நாலு திசையும் நோக்கி வாழ்த்திக் கும்பிட்டார்கள். அதன் பின் நாற்று நடுபவர்களைப் பகுத்து நிற்க வைத்து குரவை

Academic Research News
*Peer-Reviewed Journal*
19
Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

ஒலியினை எழுப்பி பயிர் நெருங்காமல் தொளியிலே பதியுங்கள் என்று பள்ளிகளுக்கு ஆணையிட்டதை,

**முந்தித் தரிசை அடித்து மறித்து**
**முச்சாலடித்திட் டுழவு நாலும்**
**முழுதும் உழுது திருத்தும் பரம்பு**
**மூன்றுந் தடவியே**
**அந்தத் தொளிக்குச் சமைந்த நாற்றை**
**அடுத்த வயலிற் பிடுங்கி வேறே**
**அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க**
**ளாய்க் குவித்தபின்**
**வந்தித் தழகர் பதத்தைத் துதித்து**
**வைத்த நாற்றை எடுத்து நெற்றியில்**
**வைத்துநாலு திசையும் நோக்கி**
**வாழ்த்திக் கும்பிட்டே**
**பந்தி பகுந்து நிரையை வகுத்துப்**
**பரவை யொலிபோல் குரவை எழுப்பிப்**
**பயிர் நெருங்காமல் கலந்து போகாமல்**
**பதியும் பள்ளீரே (பா. 126)**

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன.

**முடிவுரை**

*முக்கூடற்பள்ளு* என்பது இடத்தால் பெயர் பெற்றது. இன்று முக்கூடல் என்பது சீவலப்பேரி என்று அழைக்கப்படுகின்றது. முக்கூடல் நகரின் சிறப்பினை கற்பனை நயம் பட அழகாக ஆசிரியர் விவரித்துள்ளார். இந்நூல் வழி பள்ளரின் வாழ்வில் பற்றியும், தெய்வ வழிபாடு பற்றியும் அழகாக எடுத்துரைக்கின்றது. அதுமட்டுமல்லாமல் அழகர் நகர்,தென்கரைவளம், வடகரை வளம், மருதூர் வளம் பற்றியும் அறிய முடிகின்றது. மேலும், உழவுத் தொழிலில் பள்ளர் இன மக்களின் சிறப்பினையும் இந்நூல் எடுத்தியம்புகின்றது. அத்தோடு வித்து வகைகள், மாடுகள், விதைகள் முளைத்தல், நாற்று நடுதல் பற்றி சிறப்பாக இந்நூல் வழி அறிய முடிகின்றது. இந்நூலின் வழி பழமையான பள்ளர் இன மக்களின் வாழ்வியலையும், உழவுத் தொழிலின் மேன்மையையும் பழமையையும் இன்றைய மக்களுக்கு தெரியப்படுத்த இவ்வாய்வுக்கட்டுரை துணை நிற்கும்.

**குறிப்புகள்**

[1] கலாவதி, வி, முனைவர். *தமிழ் இலக்கிய வரலாறு* – II, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2023.
[2] புலியூர்க் கேசிகன். *முக்கூடற் பள்ளு*. பாரி நிலையம், சென்னை -109, 2001.
[3] ரவிசங்கர், செ. முனைவர். *தமிழும் அறிவியலும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2024.
[4] ராஜம், எஸ். *முக்கூடற் பள்ளு*. பாரி நிலையம், சென்னை -109, 1959.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.